# உயர் வளர் தமிழ் கற்கை நெறி

**அறிமுகம்**

கொழும்புத் தமிழ்ச் சங்கம் கடந்த சில ஆண்டுகளாக "தமிழ்ப் பட்டயக் கல்வி" எனும் கற்கை நெறியைத் தொடர்ந்து நடத்தி வந்தது. தற்போது இந்தக் கற்கை நெறியின் பாடத்திட்டம் மீள் சிந்தனைக்கும் மீள் ஒழுங்கமைப்புக்கும் உள்ளாக்கப் பட்டுள்ளது.

தமிழ்க்கற்கை நெறி உலகில் நிகழும் முறைசாராக் கல்வி ஏற்பாடுகளை அடியொற்றி நெகிழ்ச்சிப் பாங்கானதாக உருவாக்கப்பட்டிருந்தது.

தொடக்க காலங்களில் தமிழ்ச் சங்க மரபு தமிழ்க் கல்வியை வழங்குவதற்கு புலவர், பண்டிதர் கற்கைகளுக்கான வகுப்புக்களை நடத்தி வந்தது. கொழும்புத் தமிழ்ச் சங்கமும் ஆரம்பம் முதல் இந்தக் கல்வி மரபு வழியில் சிறப்பாக இயங்கி வந்தது.

தற்பொழுது கொழும்புத் தமிழ்ச் சங்கம் இந்தத் தமிழ்க் கல்வி மரபுத் தொடர்ச்சியின் நீட்சியாக பண்டிதர், புலவர் கற்கை நெறிகளுக்கு சமாந்தரமாக சமகாலப் பொருத்தப்பாட்டுடன் கூடிய உயர் கல்வியின் கூறுகளையும் உள்வாங்கி உயர் வளர் தமிழ்க் கற்கை நெறியை ஆரம்பிக்கின்றது.

இக்கற்கை நெறி 2026 தை முதல் ஆரம்பிக்கப்படுகிறது. இந்தக் கற்கை நெறிக்காலம் ஒருவருட காலப்பகுதியைக் கொண்டதாக இருக்கும்.

சுமகாலத் தமிழ்க் கல்வி தமிழயல் கல்வியாக உருமாற்றம் பெற்று வளர்ச்சி அடைந்து வருகின்றது. கொழும்புத் தமிழ்ச் சங்கமும் இந்தக் கல்வி மரபின் தொடர்ச்சியாக உயர் வளர் தமிழ் கற்கை நெறியை ஆரம்பிக்கின்றது.

இந்தக் கற்கை நெறிக்கு அமைவானதாக அறிபொருள் கற்கை அல்லது பொருண்மை சார் கற்கை (theamatic studies) அறிமுகம் செய்யப்படுகின்றது. இதன் மூலம் மாணவர் தாம் விரும்பியவாறு ஒவ்வொரு அறிபொருள்களைத் தெரிவு செய்தும் கற்க முடியும். ஒவ்வொரு கற்கை நெறியிலும் அதற்குரிய சான்றிதழையும் மாணவர் பெற்றுக் கொள்ள முடியும்.

இக்கற்கை நெறியில் ஆறு அறிபொருள்களைக் கற்ற நிலையில் மேலதிகமாக குறித்த ஓர் ஆய்வேட்டையும் நிறைவேற்றித் தருதல் வேண்டும். இதன் பின்னர் உயர் வளர் தமிழ் கற்கை நெறி "தமிழியர்" எனும் பட்டத்தை வழங்கும்.

ஓவ்வோர் கற்கை நெறியும் முப்பது மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும். மேலும் மாணவர் விருப்பத்துக்கேற்ப மேலதிக வகுப்புகளும் நடைபெறும்.

ஆரம்பத்தில் இக்கற்கை நெறி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய பிரதேசங்களில் நடைபெறும்.

இக்கற்கை நெறியில் திரட்டிய இறுதிப் பரீட்சை ஒன்று இல்லை. இந்தக் கற்கை நெறி நிகழ்ந்து கொண்டிருக்கும் போது மாணவர் ஒப்படைகளைச் செய்வதும் அளிக்கைகளை வழங்குவதும் மேலும் பல்வேறு படைப்பாக்கத் திறன்களை வெளிப்படுத்துவதும் உள்ளிட்டவை திரட்டிய இறுதிப் பரீட்சைக்கு ஒப்பானதாகவே அமையும்.

**கற்கை நெறியின் நோக்கங்கள்**

- தமிழறிவைப் பகிர்தல்,பரப்புதல்,தொழிற்பாட்டுக்குட்படுத்தல்
- பாடசாலைக் கல்வியில் தமிழறிவை உரிய முறையிலே பெறாதோர்க்கு ஊட்டல் தருதல்
- தமிழ் மொழியின் பன்முக வளர்ச்சிகளை தமிழியல் கற்கையாக அறிந்து கொள்ளச் செய்தல்
- தொழில்களில் இருந்தவாறே தமிழ் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்
- தமிழ்மொழி வழியான தரமான இலக்கியச் சுவை,கலைச்சுவை மற்றும் தமிழுணர்வு ஆகியவற்றை அறிந்து கொள்ளச் செய்தல்
- கனதியானதும் ஆழமானதும் ஆக்க நிலைப்பட்டதுமான திறனாய்வுத் திறனை வளர்த்தல்
- தெளிவானதும் செவ்விதானதுமான தொடர்பாடல் திறனை வளர்த்தல்
- தரமான வாசிப்போடு உறவாடும் திறனை வளர்த்தலும் மேம்படுத்தலும்
- தமிழ்மொழி வாயிலான படைப்பாக்கச் செயற்பாடுகளை வளர்க்கத் துணை செய்தல்
- தமிழ்மொழி வாயிலான பெரும் அறிவுப் பாரம்பரியத்தோடு உறவாடல்

**கற்கும் மாணவர்கள்**

- தமிழ்க் கற்கை நெறியில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் இணைந்து கற்க முடியும்.
- இடைநடுவில் கல்வியைத் தொடர முடியாதவர்கள் யாவரும் இக்கற்கை நெறியில் இணைந்து கொள்ளலாம்.
- எழுத்தாளர்கள்,கலைஞர்கள்,வாசிப்பு ஆர்வமும் தேடல் மிக்கோரும் இணைந்து கற்க முடியும்.
- மாணவர்கள்,முன்பள்ளி ஆசிரியர்கள்,பாடசாலை ஆசிரியர்கள்,தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள்,பெற்றோர்கள்,ஓய்வு பெற்றவர்கள்,தொழில் செய்வோர், தமிழுணர்வு தமிழார்வம் மிக்கோர் யாவரும் இணைந்து கற்கலாம்.
- பல்கலைக்கழக மாணவர்கள் மேலதிக தேடல், ஆர்வம் கொண்டவர்கள் யாவரும் இணைந்து கற்க முடியும்.

**உயர் வளர் தமிழ் - கற்கை நெறி**

**பாடத்திட்டம் - காலம் ஒரு வருடம்**

| | |
|---|---|
| 1.0 | மொழி மரபும் தமிழ் மொழியின் இயல்புகளும் |
| 2.0 | தமிழர் வாழ்வியலும் தமிழ்ப் பண்பாட்டு மரபும் |
| 3.0 | தமிழர் நிலவியலும் வாழ்வியலும் |
| 4.0 | தமிழர் இலக்கிய மரபு |
| 5.0 | நவீன தமிழ் இலக்கியம் |
| 6.0 | தமிழ் ஊடக மரபு |